நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் போதை எதிர்ப்பு மையத்தின் சார்பில் "போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு" 22.12.2022 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் - எம். ஆர். லட்சுமிநாராயணன் அனைவரையும் வரவேற்றார். செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் தலைமை தாங்கினார். இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார்.

இந்திய மருத்துவக் கழகத்தின் மகளிர் மேம்பாட்டு குழுவின் தலைவரும், நாமக்கல் - தங்கம் மருத்துவமனை மற்றும் புற்றுநோய் சிகிச்சை மையத்தின் மருத்துவருமான எம். மல்லிகா குழந்தைவேல், நாமக்கல் புகையிலை மையத்தின் ஆலோசகர் & மருத்துவர் என். பி. லலிதா மற்றும் நாமக்கல் - அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியின் தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் ஈ.ஜி. வெஸ்லி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

உலகில் 2.30 கோடி மக்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளனர். சிகரெட், பீடி போன்ற புகையிலைப் பொருட்களை உட்கொள்பவர்கள் கூட எதிர்காலத்தில் உடல் நிலையினை கெடுத்துக் கொள்ள நேரிடும். இன்றைய இளம்தலைமுறையினருக்கு அச்சுறுத்தலாக போதைப் பொருள் இருந்து வருகிறது. புகையிலை, கஞ்சா, அபின், மது போன்றவை போதைப் பொருட்களாகும். போட்டிகள் நிறைந்த இவ்வுலகில் மன அழுத்தத்தினால் நாம் பாதிக்கப்படும் போதோ, தகாத நட்பு, குடும்பப் பிரச்சனை, சமுதாயப் பிரச்சனை, யாரும் கவனிப்பாரற்ற நிலை, அதித பணப்புழக்கம் காரணமாக போதைப் பொருட்களுக்கு சிலர் அடிமையாகிவிடுகின்றனர். போதைப் பொருட்கள் நம்மை அழித்து விடும் குணம் கொண்டது. வீட்டில் யாராவது ஒருவர் போதைப் பொருட்கள் உட்கொண்டால் அவ்வீட்டில் வசிக்கும் சிறுவர்களும், இளைஞர்களும் அதனை பயன்படுத்த தூண்டப்படுவர். பெற்றோர்கள், குடும்பத்தில் உள்ள மூத்த உறுப்பினர்கள் தங்கள் பிள்ளைகள் வீட்டின் வெளியே எவ்வாறான செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை கண்காணிக்க வேண்டும். போதை இல்லாத சமுதாயம் என்பதே நம் இலட்சியமாக இருக்க வேண்டும் என்று இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு அழைப்பாளர்கள் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே செங்கொடன், செயலர் கே. நல்லுசாமி, நாமக்கல் - ரோட்டரி சங்கத் தலைவர் ஆர். விஸ்வநாதன், நாமக்கல் - இன்னர்வீல் சங்கத் தலைவர் வீ. நிர்மலா, நாமக்கல் - பொது சுகாதார விழிப்புணர்வு மையத்தின் ஆலோசகர் ஜி. ராஜ்குமார், கல்லூரியின் போதை எதிர்ப்பு மையத்தின் பொறுப்பாளர்கள் எஸ். ஜெயந்தி, கே. அமுதா, இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் பொறுப்பாளர் வீ. கலைவாணி, நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் மூலம் ஏறத்தாழ 300 மாணவியர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

22/12/2022

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.